மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: ஏற்கனவே சட்டமன்றத்திலே கூறியிருக்கிறேன். இன்னும் 8 ஏ. சி. (சினிமாக் காட்சிகள் காட்டப்படும்) பஸ்கள் விடப்பட இருக்கின்றன. அதிலே ஒரு பேருந்து இந்த வழித்தடத்திலே செல்ல இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கரூர்—சென்னை விரைவுப் பேருந்துப்பணி.

* **வினா எண். 72—திரு. கு. வடிவேல்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூரிலிருந்து திருச்சி வழியாக சென்னைக்கு ஒரு விரைவுப் பேருந்து விடும் உத்தேசம் அரசிடம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆமெனில் எப்போதிலிருந்து விடப்படும்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. என். பழனிவேல்: தலைவர் அவர்களே, கரூரிலிருந்து திருச்சி வழியாக சென்னைக்கு பேருந்துவிடும் உத்தேசம் இல்லை என்று கூறினார்கள். பழனியிலிருந்து சென்னைக்கு குளு குளு பஸ் விடுவதாக சென்ற மூன்று மாதங்களுக்கு முன்னாலேயே பத்திரிகையிலே வந்தது. இதுவரையிலே வரவில்லை. என்ன காரணம்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: குளு குளு ஏ. சி. பஸ்கள் கட்டுவதற்கு குறைந்தது 4 மாதங்கள் தேவைப்படுகிறது. அடுத்த மாதத்திலே வேலை முடிந்துவிடும். அடுத்த மாதத்திலே அந்தப் பேருந்து விடப்படும்.

கோயில் மலையனூர் அணைத் திட்டம்.

வினா எண். 73—திரு. ரா. மார்க்கபந்து, திரு. ப. சந்திரன்: மாண்புமிகு வேளாண்மை, பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) அணைக்கட்டுத் தொகுதியில் மேலாசம்பட்டுக்கு அருகில் கோயில் மலையனூர் அணைக் கட்டுத் திட்டம் கட்ட முடிவு செய்யப்பட்டு தற்போது நிறுத்தப்பட்டிருக்கிறதா?

(ஆ) ஆமெனில் பணி எப்போது மேற்கொள்ளப்படும்?

1979 நவம்பர் 2]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) & (ஆ) இத்திட்டத்தைப்பற்றி இறுதியான முடிவு செய்யப்படவில்லை. திட்டம் பற்றிய முதல்நிலை அறிக்கை ஆய்வு செய்யப்பட்டது. பாலாறு வடிநிலப்பரப்பில், தற்போதைய நிலைமையில் உபரிநீர் குறிப்பிடத்தக்க அளவு 75 சதவீதம் நம்பும் அளவில் இல்லை எனத் தெரிய வருவதால் இன்னும் சில ஆண்டுகளுக்குத் தொடர்ந்து நீர் அளவைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, அதன்பிறகுதான் இத்திட்டம் பற்றி முடிவு செய்ய இயலும்.

(முற்பகல் 9-40)

திரு. ரா. மார்க்கபந்து : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அணைக் கட்டு பகுதியில் ஏற்கனவே இரண்டு அமைச்சர்கள், வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களும் மின்சாரத் துறை அமைச்சரவர்களும் அந்த இடத்தைப் பார்வையிட்டார்கள். அவர்களிடத்தில் அது சம்பந்தப்பட்ட அதிகாரிகள், it is an economically viable unit, என்றும், Cost-benefit ratio -இல் இலாபகரமான இடம் என்றும் சொல்லி, இரண்டு இடங்களிலும் Stability position எடுத்து விட்டோம், சாதகமாக இருக்கிறது என்று அமைச்சர்களிடத்தில் நேரடியாகச் சொன்னார்கள். அப்படிச் சொன்னதற்குப் பிறகு இப்படிப்பட்ட தவறான தகவலை அமைச்சருக்குக் கொடுத்திருக்கிறார்களே, அது நியாயம் தானா. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள் ; அது கேள்வியாக இருக்கட்டும்.

திரு. ரா. மார்க்கபந்து : தயவு செய்து நான் கேட்டுக்கொள்கிறேன், எங்களுடைய வடார்க்காடு மாவட்டத்திலே ஏற்கனவே இருக்கின்ற நான்கு திட்டங்கள் ; அதாவது (1) செண்பகத்தோப்பு திட்டம் ; (2) புல்லூர் ; (3) மோர்வானா ; (4) மேலாசம்பட்டு திட்டம் ஆகிய இந்த நான்கு திட்டங்களைக் கைவிடும் அளவிற்கு அரசாங்கம் முடிவு எடுத்திருக்கிறது ; வடார்க்காடு மாவட்டத்திற்கு ஓரவஞ்சனை காட்டப்படுகிறது. அங்கே ஒன்றிரண்டு அணைக்கட்டாவது கட்ட வேண்டும். இல்லையென்று சொன்னால் நான் தெரிவித்துக்கொள்கிறேன், எங்களுடைய வடார்க்காடு மாவட்டத்திலே இருக்கின்ற அனைத்து எம்.எல். ஏக்களும் ஒருநாள் சட்டமறைத்திலே மறியல் நடத்தக்கூட நாங்கள் தயாராக இருக்கிறோம். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து கேள்வி எண் 74 . . .

திரு. ரா. மார்க்கபந்து : நான் கேட்டதற்குப் பதில் இல்லையே

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கேட்கிற கேள்வி அல்ல அது. தயவு செய்து உட்கார வேண்டும். கேள்வி நேரத்திலே தகவலைக் கேட்க வேண்டும். ஆனால் நீங்கள் அரசாங்கத்தைப் பயமுறுத்தும் வகையில் கேட்கிறீர்கள். மேலும் தகவல் வேண்டுமென்றால் கேட்கலாமே தவிர, கேள்வி நேரத்தில் பயமுறுத்துகிறீர்கள். வேண்டுமானால் அந்தக் கோரிக்கை வருகின்றபொழுது பேசுங்கள். இது கேள்வி நேரம்.

திரு. ரா. மார்க்கபந்து : அமைச்சரிடத்தில் தவறான தகவலைச் சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து கேள்வியாகக் கேட்க வேண்டும். (குறுக்கீடு) அதற்கு இங்கே வந்து என் அனுமதியைக் கொள்ள வேண்டும். கேள்வி நேரத்தை விவாதிக்குவதை நான் எப்படி அனுமதிப்பது?

திரு. ரா. மார்க்கபந்து : தவறான தகவலைச் சொல்லி இருக்கிறார்களே.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் மிகவும் சூடாகக் காணப்படுகிறார்கள். காலை நேரத்திலே இவ்வளவு சூடாக இருக்கக் கூடாது என்று உண்மையிலேயே நான் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். வடார்க்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் நான்கு திட்டங்கள் இருக்கின்றன என்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னார்கள். இதைவிட இன்னும் பல திட்டங்கள் வடார்க்காடு மாவட்டத்திலே இருக்கின்றன. அவைகள் அவரால் சொல்லப்படாமல் விடுபட்டுப் போய் இருக்கின்றன. ராஜாத்தோப்பு, ராவுத்தர் பள்ளம் பற்றி அவர்கள் சொல்லவில்லை. இருந்தாலும் வடார்க்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில், benefit-cost ratio அதாவது பயன்-செலவு கருதி சில திட்டங்களை எடுக்க வேண்டுமென்று ஆய்வுப்பணிகள் நடந்து வருகின்றன. எனவே, அவசரப்பட வேண்டாமென்று மாண்புமிகு உறுப்பினரவர்களுக்குத் தெரிவித்துக்கொண்டு, சில திட்டங்களை இந்த அரசு கண்டிப்பாகச் செயல்படுத்தும் என்ற உறுதியைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவரவர்களே. . .

திரு. துரை முருகன் : தலைவரவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது அணைக்கட்டுத் தொகுதி பற்றிய கேள்வி. வடார்க்காடு மாவட்டத்தில் உள்ளவர்களைக் கேட்கத் தூண்டியிருக்கிறது.

1979 நவம்பர் 2]

திரு. துரை முருகன் : நான் கேள்வி கேட்பதற்காக அங்கேயிருந்து ஓடி வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏன் ஓடி வருகிறீர்கள், நிதானமாக வருவதுதானே. இது அணைக்கட்டு தொகுதி பற்றியது; அணைக்கட்டு வேலூர் அருகில் இருக்கிறது, எனவே உறுப்பினர் துரை முருகன் அவர்கள் உட்கார வேண்டும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவரவர்களே . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் குடியாத்தம் தொகுதி. எனவே, நீங்கள் உட்காருங்கள்.

வேப்பூர் ஒன்றியத்தில் புதிய ஏரி அமைப்பு.

* **வினா எண் 74—திரு. என். பெருமாள் :** மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், பெரம்பலூர் வட்டம், வரகூர் தொகுதியைச் சேர்ந்த வேப்பூர் ஊராட்சி ஒன்றியம் ஆயக்குடிக்கும் ஆசூருக்கும் இடையில் கட்டவிருக்கும் ஏரியின் மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு

(ஆ) எப்பொழுது வேலை ஆரம்பிக்கப்படும்?

(இ) இதனால் எத்தனை ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

(அ) உத்தேசத் திட்டத்தின் தற்போதைய மதிப்பீட்டுத் தொகை சுமார் ரூ. 6.15 லட்சம்.

(ஆ) திட்டம் தல அதிகாரிகளின் ஆய்வில் உள்ளது.

(இ) சுமார் 235.25 ஏக்கர் புன்செய் நிலங்கள் பாசன வசதி மூலம் நன்செய் நிலங்களாக மாற்றப்படும்.

நீலகிரியில் கற்பூர தைலம் தயாரிக்கும் தொழிற்சாலை.

* வினா எண் 75—**திரு. போ. கோபாலன் :** மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நீலகிரியில் கற்பூர தைலம் தயாரிக்கும் தொழிற்சாலை ஏற்படுத்துவது குறித்த செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?